உதவி அமர்வு நீதிமன்றம், மேலூர்

S.C No.665/2023

| | |
|---|---|
| பெயர் | :மகேஷ் (அ.சா.10) |
| தகப்பனார் பெயர் | :சரவணபவன் |
| கணவர் பெயர் | : |
| வயது | :39 |
| கிராமம் | :சென்னை, திருமங்கலம் |
| வட்டம் | :சென்னை |
| தொழில் | : Grade I Bench clerk, நீதித்துறை |

சாட்சி சத்தியபிரமாணத்தின் பேரில் விசாரிக்கப்பட்டார்.

20.11.2025

முதல் விசாரணை:

என்னை ஒத்தக்கடை காவல் ஆய்வாளர் இந்த வழக்கு சம்பந்தமாக விசாரணை செய்தாரா என்றால் என்னை செல்போன் மூலமாக விசாரணை செய்தார். 2017ம் ஆண்டு குடும்ப பிரச்சினை சண்டையாக மாறியதாக என்னிடம் சொன்னார்கள். மதுரை 5வது கூடுதல் மாவட்ட நீதிமன்றத்தில் வேலை செய்த அருண் என்பவர் என்னுடைய நண்பரா என்றால் ஆமாம். நண்பர் தான். 26.06.2017 அன்று எனக்கு திருமணம் சிராஜ்மால், எழும்பூரில் நடந்தது. 25.06.2017 அன்று மாலை சுமார் 6.00 மணியளவில் வரவேற்பு நிகழ்ச்சி துவங்கியது. மறுநாள் காலை 7.30-9.00 மணிக்குள்ளாக எனக்கு திருமண நிகழ்வு நடந்தது. மேற்படி அருண் என்ற நபர் முதல் நாள் மாலை நடந்த வரவேற்பு நிகழ்ச்சியிலும்,மறுநாள் திருமணத்திலும் பங்கெடுத்து கொண்டார், அதற்கான புகைப்படமும் எங்களிடம் உள்ளது. மேற்படி விபரத்தை போலிஸ் விசாரணையில் சொல்லியிருக்கிறேன்,

புகைப்படத்தையும் காவலர்களிடம் கொடுத்தேனா என்றால் என்னிடம் கேட்கவில்லை என்பதால் கொடுக்கவில்லை.

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை : இல்லை.

SAMUNDESWARIPRABHA Digitally signed by SAMUNDESWARIPRABHA Date: 2025.11.20 20:13:36 +0530

Assistant Sessions Judge

Melur